9.89

உ

# தெல்லிப்பழை, துர்க்காபுரம்
# மகளிர் இல்லம்
# கட்டடத் திறப்பு விழா
# சிறப்பு மலர்



வெளியீடு: 31-1-1986

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

உ



# தெல்லிப்பழை, துர்க்காபுரம்

# மகளிர் இல்லம்

# கட்டடத் திறப்பு விழா

# சிறப்பு மலர்


*

வெளியீடு: 31-1-1986

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்



வரலாறு படைத்த மகளிர் இல்லக் கட்டட முகப்புத் தோற்றம்
திறப்பு விழா 31-01-1986

உ

# சமர்ப்பணம்

அன்னை துர்க்காதேவியின் அருள் நிழலில் இயங்கி வரும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அமைவதற்கான எழில்மிகு கட்டடத்தின் திறப்பு விழா மலரை அன்புள்ளம் படைத்த அனைவர் சார்பிலும் எம்பெருமாட்டி திருவடிகளில் சமர்ப்பித்து வணங்குகிறோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
நிர்வாகசபைத் தலைவர்

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை,
*31-1-86.*

உ

தேவி சகாஜம்

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார்
''வாமதேவ சிவாச்சாரியார்''

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

**''மாதர்மே மது கைட பக்னே மகிஷ பிராணுப காரோத்நியமே**
**கேலாநிர்ம்மித தூம்பிர லோஜனவதே கேசண்ட முண்டார்த்தினி**
**நிஷ்யேசி கிறுத பீஜ தனுஜே நித்தியே நிசும்ப பாவகே**
**தும்பத் றத்தசினி சங்கராதி துரிதம் துர்க்கே நமஸ்தே அம்பிகே.''**

அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்பாளின் தேவஸ்தானத்தில் நடைபெற்று வரும் அரும்பெரும் பணிகளை மதிப்பிட முடியாது. ஆலய பணிகளுடன் மேலும் அண்மைக்காலத்தில் ஆதரவற்ற பெண்குழந்தைகளை ஆதரித்து அவர்களுடைய கல்வி, உறைவிடம், உணவு, தெய்வீகப்பணி, சமயவாழ்வு போன்றவற்றை வழங்கிவரும் தேவஸ்தானத்தின் தலைவியாக விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பெரும்பங்கு போற்றத்தக்கது. அவர்களின் செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் நிர்வாகசபையின் பங்களிப்பையும் நாம் மறக்க முடியாது.

அவர்களின் அயரா முயற்சியின் பெறுபேறாக உருவாகிவரும் மகளிர் இல்லக் கட்டடம் பலவித வசதிகளுடன் அமைக்கப்பெற்றுள்ளது. இந்த ஆதரவற்றவர்களின் இல்லக் கட்டடத் திறப்பு விழா நிகழும் இந்நந்நாளில், மேலும் அவர்களின் பணிகள் சிறக்க எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக விளங்கும் ஸ்ரீ துர்க்கா தேவியின் திருவருள் கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

சர்வே ஜனகா சுகினே பவந்து

சுபமஸ்து

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், **இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**
தெல்லிப்பழை,
*7-1-86.*



துர்க்காபுரம் மகளிர் இல்லக் கட்டட திருப்பணிக் குழுவினர்

மேலே : திரு. ச. ஆறுமுகநாதன் ( உபதனாதிகாரி ), திரு. இ. முருகையா, திரு. வை. இரத்தினம் (கட்டட ஆலோசகர் ), திரு. அ. சண்முகநாதன் ( தனாதிகாரி ).

கீழே : திரு. சு. சிவவாகீசர் (இணைச் செயலாளர்), சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி (தலைவர்), திரு. க. தணிகாசலம் ( இணைச் செயலாளர் ).

உ

சிவமயம்

இலக்கியகலாநிதி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலனசபையினர்
சமயப் பணியுடன் மாத்திரம் நின்றுவிடாமல்,
சமூகப்பணியிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்து வருவது
ஏனைய சமய ஸ்தாபனங்களுக்கு
முன்மாதிரிகையான செயலாகும்.

* * *

வேத சிவாகம நெறிகளை வளர்ப்பதிலும்
அநாதர்களை ஆதரிப்பதிலும்
தேவஸ்தானம் மிகுந்த அக்கறை செலுத்திவருவது
யாவருமறிந்தது.

* * *

நவீன வசதிகள் யாவும் பொருந்திய
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
வருங்காலத்தில் நன்கு பிரகாசிக்கக்கூடிய வகையில்
திருவுருவப் படத்தினை அங்கு பிரதிஷ்டை செய்யஇருப்பது
பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

* * *

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினர்,
துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின்வாயிலாக மேலும் நற்பணிபுரிய,
ஸ்ரீ துர்க்கா தேவியின் திருவடிகளை மனசில் இருத்திப்
பிரார்த்திப்போமாக.

சி. கணபதிப்பிள்ளை

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி*
*24-1-86*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

**பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

தெல்லிப்பழை துர்க்காதேவியின் அருளாட்சியில் இயங்கும் துர்க்கா மகளிர் இல்லம் தன்னுடைய செயற்பாட்டில் மேலும் விரிவடைந்து செல்வதைப் புலப்படுத்தும்வகையில் அமைந்துள்ள புதிய கட்டிடத் திறப்புவிழா நிகழ்ச்சியைப் பாராட்டும் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். இவ்வில்லத்தில் வாழும் சிறுபிள்ளைகளுடன் சேர்ந்து யோகப்பயிற்சி ஆசிரியர் திரு. இ. சபாரத்தினமிடம் யோகாசனப் பயிற்சிபெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எனவே இந்நிகழ்ச்சி எமக்கு ஓரளவு மனநிறைவையும் அளிக்கின்றது.


ஆலயம் என்பது ஒரு வழிபாட்டு நிலையம் என்ற வகையில் நிலவும் பொதுவான கருத்துநிலையினை மாற்றியமைத்து, அது வாழ்வளிக்கும் ஒரு நிலையமுமாகும் என்பதனைச் சாதனைமூலம் செய்துகாட்டிவரும் துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவற் குழுவினருக்கும் அதன் உயிர்நாடியாக நின்று யாவற்றையும் செயற்படுத்தும் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

பண்டைக்காலத்தில் ஆலயங்கள் சமூகத்தின் பல்வகைப் பணிகளையும் செய்யும் சமூக மத்திய நிலையங்களாக விளங்கின என்பதை வரலாறுகள் காட்டுகின்றன. அத்தகைய நிலையை மீண்டும் எமது காலப்பகுதியிலும் ஏற்படுத்தலாம் என்பதனைத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பல்வேறுவகைப்பட்ட சமூகத் தொண்டுகள் மூலம் எமக்கு எடுத்துக் காட்டிவருகின்றனர். தேவஸ்தான வருவாயில் சமூகப் பயன்பாட்டிற்குரிய அறப்பணிகள் பலவற்றைச் செய்யும் அவர்கள் அவற்றின் ஒரு பகுதியாக ஆதரவற்ற பெண்களுக்கு வாழ்வளிக்கும் இம்மகளிர் இல்லத்தை நடத்தி வருகின்றனர். இவர்களது இச் செயற்பாடு ஈழத்தின் ஏனைய சைவ ஆலயங்களும் பின்பற்றக்கூடிய ஒரு முன்மாதிரியாக உள்ளதென்பதை மனமகிழ்வுடன் நினைவுகூருவதோடு, ஏனைய சைவ ஆலயங்களும் இத்தகைய சமூகப்பணிகளில் ஈடுபட முன்வர வேண்டுமென்பதை ஒரு வேண்டுகோளாகவும் முன்வைக்க விரும்புகின்றேன்.

துர்க்கா மகளிர் இல்லம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு உழைக்கும் சமயநெறிப் பெண்களை உருவாக்கி, பொலிவுடனும் சிறப்புடனும் விளங்க எமது வாழ்த்துக்கள்.

*8-1-86*

**சு. வித்தியானந்தன்**



துர்க்காபுரம் மகளிர் இல்லம்

மாவட்டச் செயலாளர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

**உயர்திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

வாழ்க்கையில் ஆதரவற்றவர்களேயோ அல்லது ஆதரவு குறைந்தவர்களேயோ ஆதரிக்கும் பண்பு எமது பண்பாட்டுக்குப் புதியதல்லதாயினும், தனிப்பட்ட ஓரிருவருக்கு மாத்திரம் உதவுவது சமூக சேவையாகாது என்பதை உணர்ந்து ஒரு கணிசமான தொகையினர்க்காயினும் உதவவேண்டுமென்னும் உயர்ந்த நோக்கத்தின் பெறுபேறே தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்லம் ஆகும்.

குறிப்பாகக் கூறின், இலங்கைத் தமிழ் மக்களின் மத்தியில் இத்தகைய ஒரு பெருமுயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது இதுவே முதற்தடவையாகும் என்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

அதனிலும் விசேடமான ஒரு அம்சம் உண்டு. எமது இந்து ஆலயங்கள் பல வருமானம் குறைந்தனவாய் இயங்குகின்றன. நல்ல வருமானம் பெறும் ஆலயங்கள் சிலவற்றில் நிதி நிர்வாகம் சீர் கெட்டிருப்பதையும் நாம் அறிவோம். இன்னும் சில ஆலயங்களில் ஆலய சம்பந்தமான செலவுகட்கு மாத்திரமே அவ்வருமானம் பயன்படுகிறது.

ஆனல், இங்கு ஒரு இந்து ஆலயம் தனது வருமானத்தில் ஒரு மகளிர் இல்லத்தை நடத்தி வருவது மாத்திரமன்றி, இன்று 15 இலட்சம் ரூபா செலவில் அதற்கென ஓர் மாடிக்கட்டிடமும் அமைத்துள்ளதென்பதையிட்டு இந்து உலகம் முழுவதுமே பெருமைப் படுகிறது. இது உலகிற்கே ஒரு முன்மாதிரியாகும்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகிகளின் இத்தகைய பணி மேலும், மேலும் வளர்ச்சியுற்றுப் பரிமளிக்க எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவி அருள்புரிவாராக.

*10-1-1986* **வை. மு. பஞ்சலிங்கம்**

உ

மல்லாகம் மாவட்ட நீதிபதி

**திரு. க. வி. விக்கினேஸ்வரன் அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

துர்க்காபுரம் மகளிர் இல்லம் அமைந்தமை துர்க்கா தேவஸ்தானத்தின் பன்முகப் பணியவற்றுள் சீரியதொன்றாகும். இல்லம் இனிதே நடைபெற இறைவனை இறைஞ்சுகிறோம். இங்கு வாழ் நங்கையர் தம்மையும் தம்மைச் சுற்றியுள்ளோரையும் வளப்படுத்த வேண்டுமெனில் தங்கையராக மாறவேண்டும். அதாவது தம்கையர் ஆகவேண்டும். தம்கையே தமக்குதவி என்றெண்ணி இல்லத்தில் இல்லாமை ஒழிக்கவேண்டும். வெளியே இருந்து எந்நேரமும் உதவி எதிர்பாராது தத்தமது தேவைகளைத் தாமே பூர்த்திசெய்ய நற்பல பணிகளில் ஈடுபடவேண்டும். செய்திறனைப் பெய்வளையர்க்கு நல்கினால் பெய்திறனை அவர்கள் மெய்யாக வெளிப்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. சைவத் தமிழ்வழியில் இவர்களை வழிநடத்தும் இல்ல நடாத்துனர்க்கும் இல்வாழ்வோர்க்கும் தெய்வ அனுக்கிரகம் என்றென்றும் கிட்டுவதாக.

*8-1-1986* — **க. வி. விக்கினேஸ்வரன்**



மகளிர் இல்லக் கட்டட வேலையில் பங்குகொண்ட பணியாளர்

இந்துசாதனம் பத்திராதிபர்

**திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்து

## ஈதல் அறம் ஈதே எழில்

மகவர்க்கோர் மாடவில்லம் மன்னி,யிந் நாளிற்
புக,வன்னை துர்க்கா புரத்தில் — அகமகிழ்ந்தாள்
ஆதர வற்றவர்க் கன்னமறிவுக் காம்நெறி
ஈதலறம் ஈதே எழில்.

20-1-86 நம. சிவப்பிரகாசம்

தெல்லிப்பழை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

**திரு. கே. சி. சிவமகாராசா அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்பர் அறிஞர். இறை பணி ஆற்றிநிற்கும் துர்க்கா தேவஸ்தானம் இந்த உண்மைத் தத்துவத்தைத் தன் ஒவ்வொரு செயற்பாட்டிலும் கடைப்பிடித்து வருகின்றமை பெருமைப் படத்தக்கதாகும். துர்க்கா மகளிர் இல்லம் இதனைத் துலாபாரமாகக் காட்டி நிற்கின்றது. இம் மகளிர் இல்லம் நாற்பது பெண் குழந்தைகளுக்கும், நான்கு பெண்களுக்கும் நல்லாதரவு நல்கி, வாழ்க்கைநெறிபுகட்டி அவர்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டி வருகின்ற சமூகப்பணி போற்றுதற்குரியது. இப்பணியினை மேலும் விரிவாக்கிச் சிறப்புற ஆற்றிட பதினைந்து லட்சம் ரூபா செலவிட்டு மாடிக்கட்டிடம் ஒன்று அமைத்துள்ள அருஞ்செயலை, அது திறந்துவைக்கப் படவிருக்கின்ற இவ்வேளையிலே ஈரநெஞ்சம் ஒவ்வொன்றும் பாராட்டும். இக் கட்டான இக்காலகட்டத்தே இச்செயல் செயற்கரியதே.

ஆலயங்கள் பக்தி வளர்க்கும் புனித இடங்களாக மட்டுமன்றி மக்கள் துயர் துடைக்கும் ஆதுலர்சாலைகளாகவும் விளங்கிடமுடியும் என்ற புனித நோக்கை புதிய மகளிர் இல்லக் கட்டிடம் நிலைநாட்டியுள்ளமை நன்னெஞ்சங் களை நன்மகிழச் செய்கின்றது. ஏழை நெஞ்சங்கள் இப்புனித பணியினை என்றும் வாழ்த்தி நிற்கும். இக்கட்டிடத்தின் மூலம் மேலும் பல ஏழை மகளிர்க்கு வளமிகு வாழ்வளித்து அவர்களை வையத்து வாழ்வாங்கு வாழ வைக்க மகளிர் இல்லம் பணியாற்றிட வேண்டுமென இதயமார வாழ்த்துகின் றோம். இச் செயற்கரிய செயலைச் செய்த துர்க்கா தேவஸ்தானத்திற்கும், துர்க்கா துரந்தரி அவர்களுக்கும் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. திறப்பு விழா சிறப்பு விழாவாக, சிவத்தமிழ் விழாவாகப் பொலிந்திட வாழ்த்துகின்றேன்.

*10-1-1986* கே. சி. சிவமகாராசா



மகளிர் இல்லக் கட்டடவேலையில் பங்குகொண்ட பணியாளர்கள்

இராமநாதன் பெண்கள் கல்லூரி அதிபர்

திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்து

## பெருமாட்டி அருள்பெற்றுப் பெரிதாக வாழ்கவே

1. பொருள்செறி தெல்லிப் பொற்பதி நடுவண் திரு
அருள்சொரி துர்க்கை ஆலய மருங்கில்
இருள்நெறி அகற்றி அருள்வழி ஈர்த்து
மருள்நிலை போக்கும் மண்டபம் மலர்க.

2. முன்னைப் பெருந்தவமோ முப்பொழுதும் தொழுதவமோ
பின்னைத் தொடர்பெரு வினைஅணுகாது தொண்டாற்ற
என்னையாள் பெருமாட்டி திருநோக்குப் புரிகின்ருள்
அன்னையாய் தங்கம்மா அமைக்கின்ருர் மகளிர்மடம்.

3. தெரிந்தும் தெரியாததுமாய் தொல்வினையால் தவறுசெய்தார்
புரிந்ததை எண்ணிச் சாகாது திருந்திப் புதுவாழ்வுபெற
பரிவுக் கிலக்கான ஊனமுற்ருர் உய்திபெற, இனம்
பிரிந்தார் வாழ்வுபெற கரைவிளக்காய் உயர்ந்ததுவே.

4. தாரம் இழந்தோர் தாய்இழந்தோர் தவறியே வாழ்விழந்தோர்
பாரமே உயிர்என்று பரிதவித்து மறுகிமனம் மாழாமே
சாருமே எமதில்லம் வாருமே சிவதொண்டு உண்டென்று
ஆருமே செய்யாத அரும்பணியின் பெருமாடம் பெரிதுவாழி.

5. பெண்குலத்தின் சோர்வகற்றி பேதலிக்கும் மனம்திருத்தி
உண்பனவும் உறையுள்ளும் உடையும் இனிதளித்து
கண்ணெனவே கல்வியொடு பண்பும் பரிந்தூட்டி
மண்ணில் நல்லவண்ணம் வாழி வழியாற்றி மாடி வாழி.

6. வாஎன ஏற்கநல் மண்டபம் ஒன்றுண்டு துயர்தீர்க்க,
மாபெருந் தொண்டாற்று சபைத் தங்கம்மாத் தலைவியுண்டு
தாஎன்ருர்க்கு அருள்தரத் துர்க்கை திருக்கை உண்டு
ஓஅரிது பிறவி! இனிவாழ்வு இனிது!! இல்லம் வாழி வாழி.

திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம்

## ஏழாலை, பண்டிதர் மு. கந்தையா அவர்கள்

வழங்கிய

# வாழ்த்து

'எங்கள் பெருமானை இமையேரேத்த உமையோ டிருந்தானே' — என்ற அநுபூதிக் காட்சி சைவத்திற்கே உரியது. தெய்வீகத்திற் பெண்மை லயங்கொள்ளக் காணும் அநுபூதி விசேடமே லௌகிகத்திலும் பெண்மையில் தெய்விகச் சீர்மை நிலவக் காணுமளவுக்கு மனிதக் கண்ணைத் திறந்துள்ளது. இதனால், சைவப் பண்பாட்டில் மகளிர் நோக்கப்படுந் திறம் உலக சாமானிய நோக்கிற்கு மேலாம் விசேடமுடையதாம். அந்நோக்கில் ஸ்திரீ தர்மம் சைவதர்மங்கள் முப்பத்திரண்டினுள் முதன்மைபெற்று விளங்குகின்றது. மகளிர் தம்மியல் பான தெய்விக நோன்மைப் பண்புகளில் — அன்பு, அறிவு, அடக்க, ஆசார, உபசாரப் பண்புகளில் — வரட்சியற்றுச் சிறந்தோங்குதற்கு ஆவனவெல்லாஞ் செய்து, ஆவைப் பேணுவது போல நோவாமற் பேணுவதே ஸ்திரீ தர்மம் என்பர். குடும்பரீதியிலுஞ்சரி, சமூகஸ்தாபனரீதியிலுஞ்சரி இதே பாங்கில் ஸ்திரீ தர்மம் பேணப்பட வேண்டியது அவசியமாகும்.

குடும்ப ஸ்திரீயாகப்பேணல்பெறும் வாய்ப்பு வசதிகளற்ற பெண்குழந்தைகள், கன்னியர் தாய்மார்களே, அன்னை துர்க்கா தேவியின் அருள்மிகு சந்நிதியில் அமர்த்தி வைத்து ஸ்திரீ தர்மம் பேணும் பாங்கில் துர்க்கா தேவஸ்தான பரிபாலன சபையார் மேற்கொண் டிருக்கும் பணி சைவத்துக்கோர் வரப்பிரசாதமாம். தேவஸ்தாபனங்கட்கோர் முன் மாதிரியுமாம்.


தெய்வம் பார்க்கட்டுமென்று நாம் வாளாவிருந்தால் அவர்கள் (நாம்) பார்க்கட்டு மென்று தெய்வமும் வாளாவிருக்கும் — என்பதில் உண்மையுண்டு. அது எங்ஙனமெனில் தெய்வகருணை கூர்வதால்தான் நமது நலங்கள் செழிக்கும். அதேவேளை அந்த அளவுக்குத் தெய்வகருணை கூர்வதற்கு முன்னோடியாக யாம் மேற்கொள்ளும் அநுசரணைகளினால்தான் தெய்வகருணை வீறுறுகின்றது. சைவ நோக்கில், தெய்விகத்துக்கும் லௌகிகத்துக்கும் இடையிலான அத்தியந்த உறவு நிலை இது. எனவே, நமக்கு எல்லாவிதத்திலும் உபகரிப்ப தான சக்தி கூர்ப்படைதற்கு முன்னோடியாக அதற்குச் சமாந்தரமாக நம்மத்தியில் விளங்கும் நடமாடுஞ் சக்திகளை நாம் பேணும் பாங்கு நிலைகொள்ள வேண்டும். working in the microcosm adjusts conditions in the macrocosm — பிண்டமாகிய இகத்தில் நிகழுஞ் சற்கருமங்கள் அண்டமாகிய பரத்தில் அருள்நிலை கூர்ப்படைய உதவும்— சிவய சுப்பிரமுனிய சுவாமிகள், ஹவாய். இந்நோக்கில் துர்க்காபுரம் மகளிர் இல்ல பரிபால னம் துர்க்காதேவி கருணைவளத்தை மென்மேற் கூர்ப்பிக்குந் சாதனமாகின்றது. இவ் வகையில் துர்க்கா தேவஸ்தானம், சைவதர்மங்களனைத்தையும் தம்முள்ளடங்கக்கொண்டு திகழ்ந்த சோழர் காலத்துச் சிவாலயங்களையும் இன்றும் அப்பாணியில் இயன்றுவருந் திருப்பதி தேவஸ்தானத்தையும் போன்று முன்னேறுங் காட்சி சைவக் கண்களுக்குப் பிரீதியளிக்கும்.

பெரும்பாரக் காரியமான தமது தேவஸ்தானப் பொறுப்பினுள் இதற்கும் முக்கியத் துவமளித்து வரும் பரிபாலன சபையார் ஏலவே கணிசமான அளவு பெண்குழந்தைகளை ஏற்று வளர்த்துப் பேணிவந்து தற்பொழுது அவ்வகையில் மேலும் பலர் இடம்பெறு தற்குப் போதுமான நவீன வசதிகளோடுகூடிய தனியில்லங்கண்டு திறப்பு விழாவும் நிகழ்த்தும் புனித கைங்கரியம் போற்றுதல் பெறும். துர்க்காதேவி நல்லருளால் இவ்வில் லத்திற்குச் சகல விருத்திகளும் வாய்க்கப்பெற்று என்றென்றைக்கும் இது நன்முன்மாதிரி யான மகளிரில்லமாய்த் திகழ வாழ்த்துகின்றோம்.

மு. கந்தையா



துர்க்காபுரம் மகளிர் இல்ல விசேட பணியாளர்கள்



[illegible] பணியாளர்கள்

உ

# வரலாறு படைக்கும் எங்கள் மகளிர் இல்லம்

சமயம் என்பது ஒரு வாழ்க்கைநெறி. அது தன்னையும் வாழ்வித்து மற்றவனையும் வாழ வழிகாட்டும் அன்புநெறி. மக்கள் ஒன்றுகூடி வாழ்கின்ற ஒரு கூட்டமே சமுதாயம் எனப்படும். அதற்கு உயிர்நாடி சமயமே. அது வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் தழுவிக் கலக்கவேண்டும். அந்த நிலை ஏற்படுமானால் அறியாமை அகன்று வேற்றுமை விலகி அன்பும் அருளும் பெருகி சமுதாயம் மலர்ச்சியடையும். இக்கருத்தைத் திருக்கோயில்களும் சமய நிறுவனங்களும் கடைப்பிடிப்பது வரவேற்கத்தக்கதாகும். வழிபாட்டு நிலையங்களை வாணிப நிலையங்களாக மாற்றி, தனிப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் கோயில் உரிமையும் உடைமையும் என்று எண்ணுகின்ற மனப்போக்கை மாற்றி அமைப்பதும் வழிபாட்டு நிலையங்கள் அனைத்தையும் வாழ்க்கையைக் கண்ணீரோடும் கம்பலையோடும் கழிக்கும் மக்களுக்கு வாழ வழிகாட்டும் நிலையங்களாக மாற்றவேண்டும் என்பதும் பகுத்தறிவாளர் கருத்தாகும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் தயங்கமாட்டார்கள்.

**வயிற்றுக்குச் சோறிட வேண்டும் — இங்கு**
**வாழும் மனிதருக் கெல்லாம்**
**பயிற்றிப் பலகல்வி தந்து — இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்**
**அறிவை வளர்த்திட வேண்டும் — மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாய்**
**சிறியாரை மேம்படச் செய்தால் — பின்பு**
**தெய்வம்எல் லோரையும் வாழ்த்தும்.**

என்று பாடி முரசு கொட்டினார் பாரதியார். இப்பாட்டினால் எழுச்சியும் விழிப்பும் அடைந்தது எமது தமிழ்நாடு. எனினும் இந்த விழிப்பு பூரணமான வெற்றியை சமுதாயத்தின் மத்தியில் ஏற்படுத்தவில்லையென்பதையே உணரமுடிகிறது. எனவே இக்குறைபாட்டை ஓரளவு நிவிர்த்திபண்ண வேண்டிய கடமை திருக்கோவில்களுக்குமுண்டு என்பதை தேவஸ்தானம் புரிந்துகொண்டதன் விளைவே துர்க்காபுரம் மகளிர் இல்லமாக இன்று நம்முன் காட்சி தருகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்துச் சைவச் சான்றோர்கள் பலரை அழைத்து எங்கள் துர்க்காதேவி ஆலயத்தில் சைவசித்தாந்த மகாநாடொன்றை நாடறிய நடாத்திவைத்தோம். தமிழகத்திலிருந்தும் எமது நாட்டிலிருந்தும் முந்நூறுக்கு மேற்பட்ட அறிஞர்கள் இம்மகாநாட்டில் பங்குபற்றி மூன்று நாள் பேருரையாற்றியும் இன்னிசை வழங்கியும் சிறப்புச் செய்தனர். இறுதி நாளில் மேலும் இவ்வாலயம் ஆற்றவேண்டிய பணிகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் தலைமையில் நடைபெற்ற போது அமரத்துவம் அடைந்த வித்துவான் சி. ஆறுமுகம், அறங்காவலர் அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள் மகளிர் இல்லம் ஒன்று அமைத்து ஆதரவற்ற பெண் குழந்தைகளை எடுத்து வளர்த்துக் கல்வியூட்டி நற்பிரசைகளாக்குவது இன்றியமையாத கடமையென்றும், சைவத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல், திருக்குறள், இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களுக்கும் விழாவெடுத்து மக்கள் மத்தியில் இலக்கிய ரசனையையும் தமிழ் பண்பாட்டு மகிமையையும் அறியவைக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தபோது சபை ஏகமனதாக கரகோசத்தோடு ஏற்றுக்கொண்டது.

இந்த உந்துதலின் பேரில் எமது தேவஸ்தானம் 3-2-1982இல் ஒன்பது சிறுமிகளுடன் மகளிர் இல்லம் ஒன்றை ஆரம்பித்தது. இதற்கான கட்டட வசதியை மலேசியா—ஈப்போவைச் சேர்ந்த தருமசீலர் திரு. சி. சின்னையா அவர்கள் ஏற்படுத்தித்தர முன்வந்து ரூபா 56497/27 சதம் செலவையும் பொறுப்பேற்று உதவினார். அதன்பின்பு இடைக்காலத்தில் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலையிலும் ஓரளவு ஆதரவற்ற ஐந்து வயதுக்கும் பத்துவயதுக்குமிடைப்பட்ட பெண்குழந்தைகளைச் சேர்த்து இன்று நாற்பது பேர் இவ்வில்லத்தில் இடம்பெற்றிருக்கிறார்கள். மேலும் இவ்வில்லப் பணிகளை விரிவாக்கி விவாகமாகாத வயதுவந்த பெண்களையும்

இப் புனிதமான பணியில் இடம்பெற வைக்க வேண்டுமென்ற சீரிய நோக்குடன் புதிய கட்டடம் இருமாடி அமைந்ததாக அமைக்கப் பட்டுள்ளமையும் அக்கட்டட அமைப்பின் வரலாறும் இம்மலரில் மற்றோரிடத்தில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. நிற்க.

"இத்தகைய அநாதை இல்லங்கள் ஆலயங்களில் இடம்பெறவேண்டுமா? கோவிற் பணத்தைக் கோயிற் கருமங்களிலே தானே செலவிடவேண்டும். இத்தகைய பொதுப் பணிகளில் கோவிற்பணத்தை முடக்கிவிட்டால் சுவாமி காரியங்கள் தடைபட்டு விடுமோ?" என்றெல்லாம் ஒருசிலர் கேள்வி எழுப்புகின்றனர். இதற்குப் பதிலளிப்பது போல் நமது நாயன்மார்களே திருக்கோயில்களை மையமாகவைத்து அறப்பணி பல புரிந்து வந்தமையைப் பெரியபுராணம் காட்டுகிறது. எனவே நாங்களும் அந்த வகையில் ஒரு அறப்பணியை மேற்கொள்ள விரும்பினோம். ஆதரவற்ற பெண் குழந்தைகளின் வாழ்வில் விளக்கேற்றி வைக்கவே விரும்பினோம். இந்த விளக்குக்கு வேண்டிய வேண்டியபோது எண்ணெய் விட்டுத் தூண்டி எரிய விடவேண்டியது சைவமக்களின் பெருங்கடனாகும். இந்த விளக்குத்தான் இறைவன் விரும்பும் மிகப்புனிதமான விளக்கு. இதிலே இறைவனுக்கு விரோதமான காரியம் எதுவுமில்லை. அநாதை இரட்சகனாக விளங்கும் இறைவனுக்கு உவப்பான பணி இதுவேயாகும். ஏனென்றால், மனிதன் மனிதனோடு ஒன்றுபட்டுப் பழகினால்தான் கடவுளோடும் ஒன்றுபட்டு நிற்கமுடியும். சமய நிறுவனங்களையும் திருக்கோயில்களையும் நிர்வகிப்பவர்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும்.

மனைக்கு விளக்காக விளங்கவேண்டியவர்கள் பெண்கள். ஆகவே இவர்களுக்குக் கல்வியும் பண்பாடும் ஒழுக்கமும் மிக மிக இன்றியமையாதது. ஆனால் கற்கின்ற பெண்களுக்கு ஒரு இலட்சியம் வேண்டும். ஆதரவற்ற இந்தப் பெண் குழந்தைகளைக் கற்க வைக்கின்ற எமக்கும் ஒரு இலட்சியம் வேண்டும். அதாவது குறிப்பிட்ட அளவு பொதுக்கல்வியைக் கற்றதற்குப் பிறகு ஏதேனும் ஒரு நல்ல தொழிலைக் கற்றுக்கொண்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் எமது சைவத்துக்கும் இவர்கள் நன்கு பயன்படவேண்டும் என்பதே எமது சபையினரின் இலட்சியமாகும். கிறீஸ்தவ மதப் போதகர்கள், சங்கைக்குரிய கன்னியாஸ்திரிகள் இவ்விடயத்தில் எமக்குப் பெரு வழிகாட்டிகளாகக் காணப்படுகிறார்கள்.

எங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் இன்று இடம்பெற்றிருக்கும் பெண்களுக்கு அடிப்படைக் கல்வியிலே முதன்மையான ஊக்கம் கொடுக்கப்படுகிறது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் கல்வியைப் பயின்றுவரும் இச்சிறுமிகள் பாடசாலை நேரமொழிந்த நேரங்களில் தோட்டவேலை, பசு வளர்ப்பு, பன்னம், தையல் ஆதியனவற்றில் பயிற்சி பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பயனாக இல்லத்துக்கு சுமாரான வருமானமும் கிடைக்கிறது. அத்துடன் தமக்கு வேண்டிய உணவுகளை இவர்களே மிகச்சுவைபடத் தயாரிப்பதும் மகிழ்ச்சிக்குரிய சம்பவமாகும். ஆலயத்தையும் சுற்று மண்டபங்களையும் அழகாகக் கூட்டித் தூய்மைப்படுத்தலுடன் திருமாலைகட்டல் திருக்கோலமிடுதல் ஆகிய பணிகளிலும் அதிகாலை நேரங்களில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. திருமுறை ஓதல், யோகாசனம் என்பவற்றில் பயிற்சியை அளிப்பதற்கு பிரத்தியேக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தம் கையே தமக்குதவி என்ற நிலையில் இவர்கள் எதிர்காலத்தில் விளங்க வேண்டும் என்பதே எமது பெருவிருப்பம். அன்னை துர்க்காம்பிகை இதனை நிறைவேற்றி வைப்பாள் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

எனவே துர்க்காபுரம் மகளிர் இல்லம் உருவாவதற்கு உறுதுணையாக விளங்கிய எமது கோயில் அறங்காவலர் சபை பரிபாலன சபை ஆகியவற்றுக்கு நன்றி கூறுவதோடு அழகிய முறையில் அமைந்த இந்தக் கட்டடத்துக்கு அன்பளிப்புச் செய்தோர்க்கும் இல்லச்சிறுமிகளுக்கு உணவு, உடை அளிப்பதற்கு அவ்வப்போது பேராதரவு நல்குவோர்க்கும் வைப்புநிதி வைத்து கல்வி, மற்றும் தேவைகளுக்கு அதன் வட்டியைப் பயன் படுத்த ஒழுங்குகளை மேற்கொண்டோர்க்கும் இல்லச்சிறுமிகளைப் பராமரித்து வரும் அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
துர்க்காபுரம் மகளிர் இல்லம்



இல்லச் சிறுமி ஒருவருக்கு
ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்
திரு. தி. மாணிக்கவாசகர்
பரிசில் வழங்குகிறுர்

# எழில்மிகு இல்லக்கட்டடம்

எமது நாட்டின் சைவப் பெண் பிள்ளைகளின் புனர்வாழ்வுக்கென 3-2-1982இல் நிறுவப்பட்டது, துர்க்காபுரம் மகளிர் இல்லம். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முக்கிய சமுதாயப்பணியாக அமைய வேண்டுமென்ற புனித நோக்குடன் தேவஸ்தான நிர்வாக சபையின் தலைவர் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினுல் தேவஸ்தான நிர்வாக சபை, தர்ம கர்த்தா சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் இம் மகளிர் இல்லம் ஏற்படுத்தப்பட்டது. துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகள் சிறப்பான சூழலிற் பலதுறைகளிலும் பயிற்சி பெற்று, எதிர்காலத்தில் தமது வாழ்க்கையைச் செம்மையாக அமைக்க உதவவேண்டும் என்பதே இவ்வில்லத்தை அமைத்தற்குரிய சீரிய நோக்கமாகும். இவ்விலட்சியத்துக்கேற்ப ஆரம்பத்தில் ஒன்பது குழந்தைகளுடன் இவ்வில்லம் ஏற்படுத்தப்பட்டது. இன்று நாற்பது பெண் குழந்தைகள் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். துர்க்காதுரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முழுநேரப் பணியைப் பெற்றிருப்பது 'துர்க்காபுரம் மகளிர் இல்லம்' என்று குறிப்பிடின் அது மிகையாகாது. அவரின் வழிகாட்டலில் வெவ்வேறு சமூக பொருளாதார சூழலில் பிறந்த இக்குழந்தைகள் இவ் இல்லத்தில் ஒன்றுபட்ட மனப் பான்மையுடனும் மன அமைதியுடனும் மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வாழ்க்கைப் பயிற்சி மாத்திரமல்லாது பாடசாலைக் கல்வி, பிரத்தியேகக் கல்வி அறிவுப் பயிற்சியும் இங்கு அளிக்கப்படுவது குறிப்பிடப்பட வேண்டியதே. ஆகவே, துர்க்காபுரம் மகளிர் இல்ல உறையுள் வசதியைப் பெருக்க வேண்டிய அவசியம் கருதி 1983ஆம் ஆண்டு பிற்பகுதியில் மிகவும் வசதிகள்கொண்ட எழில் மிகுந்த இருமாடிக் கட்டடத்தைப் புதிதாக நிர்மாணிக்க துர்க்காபுரம் மகளிர் இல்ல நிர்வாக சபையினுல் தீர்மானிக்கப்பட்டது. அதற்குரிய கட்டடத்திட்டம் எது வித கட்டணமும் பெருது மனேகரன் வெற்றிவேல் கட்டடத்தாபனத்தினரால் வரையப்பட்டது. அதன் உரிமையாளர் திரு. மனேகரன் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறேம். அதன்பிரகாரம் புதிய கட்டட வேலைகள் மகளிர் இல்லத் திருப்பணிக் குழுவினுல் ஆரம்பிக்கப்பட்டது.

மகளிர் இல்லப் புதிய கட்டடத்திற்கு 1984ஆம் ஆண்டு தைத்திங்கள் நாலாம் நாள் (18-1-1984) தேவஸ்தான தர்மகர்த்தாசபையின் முன்னைநாள் தலைவர் அமரர் திரு. வி. தர்மலிங்கம் அவர்களால் அத்திவாரம் இடப்பட்டது.

## நிதி

மகளிர் இல்லப் புதிய கட்டடம் ஆரம்பித்த காலத்தில் அதற்குரிய செலவு பன்னிரண்டு இலட்சம் ரூபாவாக மதிப்பிடப்பட்டது. இன்று அதன் பெரும் பகுதி வேலை பதினைந்து இலட்சம் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டடத்தைப் பூரணப்படுத்த இரண்டு இலட்சத்திற்குமேல் தேவையெனக் கணிக்கப்படுகிறது. இதற்குரிய நிதியில் பெரும்பகுதி துர்க்காதேவி தேவஸ்தானமே வழங்கியுள்ளது. தனிப்பட்ட அன்பர்கள், அநாதை இல்ல ஆதரவாளர்கள் இக் கட்டடத்திற்கென தமது அன்பளிப்புகளை வழங்கியுள்ளனர். துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தூயபணியைப் போற்றி வருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள் பலர் கட்டடத் திருப்பணிக்கும், குழந்தைகளின் பராமரிப்புக்கும் இயன்ற அளவு நிதி உதவி நல்லாதரவு வழங்கியுள்ளனர். மேலும் கடந்த ஆண்டு அம்மையாரின் மணிவிழா நிதியில் செலவுபோக எஞ்சிய தொகையான முப்பதாயிரம் ரூபாவையும் தமது சார்பில் இக் கட்டடத்திற்கு வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியதாகும். மலேசியா ஈப்போ நகரைச் சேர்ந்த

சைவப் பெரியார் திரு. சி. சின்னையா அவர்கள் தமது மனைவியின் ஞாபகமாக இப் புதிய கட்டடத்தில் விருந்தினர் தங்கும் அறையொன்று பல வசதிகளுங்கொண்டதாக, அமைப்பதற்குரிய செலவாக ரூபா ஐம்பத்திரண்டாயிரம் நன்கொடையாக வழங்கியுள்ளார். அவரின் குடும்பத்தினருக்குத் துர்க்கை அம்பாள் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இக்கட்டடத்தைச் செம்மையாக அமைக்க உதவிய கட்டட ஒப்பந்தக்காரர் தெல்லிப்பழை திரு. அகஸ்தீன் ஆனந்தன் அவர்களுக்கும், அவரின் கட்டடத் தொழிற் குழுவைச்சேர்ந்த திரு.F. சவிரிமுத்து மற்றும் தொழிலாளருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். இக்கட்டட நிலைகள், கதவுகள், யன்னல்கள் முதலியவற்றைக் குறுகியகாலத்தில் மிகவும் அழகாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றித் தந்த மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. க. செல்வநாயகம் அவர்கட்கும் அவரின் குழுவினர்க்கும், இரும்புக் கிறில்களைச் சிறப்பாகச் செய்து தந்துதவிய நாதன் அயர்ண் வேக்ஸ் தாபனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இப்புதிய கட்டட கூரை அமைப்பு வேலைகளுக்கு ஒப்பந்தகாரராகிய நீர்வேலி காமாட்சி கூட்டுறவுத் தொழில் ஸ்தாபனத்திற்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். மின்சார இணைப்பு வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்து சிறந்தமுறையிற் செய்து உதவிய மல்லாகம் திரு. நா. தவமணிநாயகம் அவர்களுக்கும் வெள்ளை அடித்தல், வார்ணிஷ் பூசுதல் முதலிய வேலைகளைச் செய்துதவிய தெல்லிப்பழையைச் சேர்ந்த க. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இக்கட்டடம் சம்பந்தமாக தொழில் நுட்ப ஆலோசனையை வழங்கிய தெல்லிப்பழை தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. துரைராசா அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். இப் புதிய கட்டடத்தைச் சென்ற இரு வருட காலங்களுக்கு மேலாக மேற்பார்வை செய்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு, பொன்னம்பலம் முருகதாஸ் அவர்களுக்கு அவர்களின் சிறப்பான சேவைக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். மேலும் மற்றும் பணியாளர்களான திரு. S. சிவசுப்பிரமணியம், செல்வி கணேஸ்வரி சொக்கநாதர், திரு. கா. சிவபாலன் ஆகியோரின் பணிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவர் துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் இல்லக் கட்டடம் உருவாக ஆரம்பித்தநாள் முதலாக கட்டடத்தில் ஒவ்வொரு கட்டங்களும் நடைபெறும்போது திருப்பணிக் குழுவை அழைத்து கூட்டங்கள்கூடி மிகவும் செம்மையாக அமைய ஆலோசனைகள் வழங்கிவருகிறார். அவருடைய நல்லாதரவுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இப்புதிய கட்டடம் ஆரம்பம் முதலாக இன்றுவரை அயராது பணியாற்றிவருபவர் இணைச் செயலாளர் திரு. க. தணிகாசலம் அவர்கள் என்று சொல்வதிற் பெருமையடைகின்றோம். திரு. க. தணிகாசலம் அவர்கள் தமக்கு ஏற்படும் சிரமங்கள், கஷ்டங்கள் ஆகிய எதையுமே பொருட்படுத்தாது, தமது பேச்சு, மூச்சு, செயல், சொற்கள் ஆகிய அனைத்துமே இக்கட்டடத்தினைப் பூர்த்திசெய்ய அர்ப்பணித்து அரும்பாடுபட்டு உழைத்தார்கள். அவர்கள் மேன் மேலும் இதுபோன்ற பல பணிகளுக்கு உதவ எல்லாம் வல்ல அம்பாள் திருவருளைப் பிரார்த்திக்கிறோம். அவர்களுக்கு நன்றியோ, பாராட்டுதலோ செப்பி அமையாது, எனினும் திரு. க. தணிகாசலம் அவர்களுக்கு எமது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாகசபையிற் தனாதிகாரிப் பணியுடன் இணைந்து இல்லத்திற் பணிகளையுஞ் செய்து வருகின்றார் திரு. அ. சண்முகநாதன் அவர்கள். அவர்கள் வழங்கிவரும் பலவிதமான

பணிகளுக்கும் எமது பாராட்டுதலைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் சகல வழியிலும் ஒத்துழைப்பு வழங்கிவரும் நிர்வாகசபை, திருப்பணிக் குழு உறுப்பினர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவிக்கின்றோம். நிர்வாகசபை உறுப்பின ரான திரு. வை. இரத்தினம் அவர்கள் இக் கட்டடத்துக்குரிய தொழில் நுட்ப ஆலோ சனைகளை, காலத்துக்குக்காலம் வழங்கிய மைக்காக எமது நன்றியையும், பாராட்டு தலையும் தெரிவிக்கின்றோம். எமது சபை யின் உபதனுதிகாரி திரு. ச. ஆறுமுகநா தன் அவர்கள் கட்டிட ஆரம்பகாலந் தொ டக்கம் வேண்டிய பல்வேறு பணிகளில் ஈடுபட்டு நல்லாதரவு வழங்கிவந்துள்ளார் கள். அவர்களுக்கும் எமது நன்றி உரித் தாகுக.

மேலும் இவ்வில்லக் கட்டிடத்தைப் பூர்த்திபண்ணிக்கொள்வதற்குச் சில மாதங் கள் எடுக்குமெனினும் பிள்ளைகளின் வதிவிட வசதியை நோக்கி 31-1-86 வெள்ளிக்கிழமை கட்டடத் திறப்பு விழாவை நடாத்த அம் பாளின் திருவருள் கூட்டி வைத்துள்ளது. எனவே இக்கட்டடம் சம்பந்தமாகச் சகல ஆதரவுகளையும் வழங்கிய அனைவருக்கும் துர்க்காதேவியின் திருவருள் கிட்டுவதாக என வணங்கி அமைகின்றேன்.

**சு. சிவவாகீசர்**
இணைச்செயலாளர்
துர்க்காபுரம் மகளிர் இல்ல நிர்வாகசபை

✱

உ

## நாவலர் பெருமான் கூறும் தருமம்

"அநாதைப் பிள்ளைகளை வளர்த்துக் கல்வி கற்பித்துவிடல் வேண்டும். திக்கற்ற விதவைகளை அன்னவஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றல் வேண்டும். விவாகமின்றி இருக்குங் கன்னியர்களைப் பொருள் செல விட்டு அவ்வவர் வருணத்திலே விவாகஞ் செய்து கொடுத்தல் வேண்டும். அநாதைப் பிணங்களைச் சுடுதல் வேண்டும்.

—நான்காம் பாலபாடம்

# கலைக்கோயில்கள்..........

# பண்பாட்டுக் கருவூலங்கள்

அறநிலையத்துறை அமைச்சர்
**மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்**

தமிழகத்தின் கலை, மொழி, சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலையங்களாகத் தமிழகத்தில் திருக்கோயில்கள் விளங்கிவந்திருக்கின்றன. மக்களுக்குத் தலைவனாகிய மன்னனைப் போற்றியதுபோல படைப்புக்குத் தலைவனான இறைவனைக் கருதியதால், அவனை மன்னர் மன்னனென்றும், கோவேந்தனென்றும் கொண்டாடிய தன் விளைவாக, கோவேந்தனுடைய இல்லம் என்னும் பொருளில், மன்னவர் அரண்மனைகளுக்கு வழங்கிய பெயர், பின்னாளில் ''திருக்கோயில்'' என்றே இறைவனின் அருள் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது.


வானுயர்ந்த கோபுரங்களும், வனப்பு உயர்ந்த மாமதில்களும், சீருயர்ந்த தேர்களும், தூய திருக்குளங்களும் கோயில் உடைமைகளாகப் போற்றப்பட்டன. எழில் மிகுந்த இக் கோயில்களினால் தமிழகத்தின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது. கோயில்கள் பழம்பெரும் நாகரிகக்கூறுகளையும், பண்பாட்டு நலன்களையும் பலவகையாகச் சுட்டிக் காட்டுகின்றன. பிரித்தானிய ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் ''கோயில் கட்டும் பெருங் கலைத்திறம் வாய்ந்தவர் தமிழர்'' என்று தமிழினத்தைப்பற்றிக் குறித்திருப்பது, நமக்குப் பெருமை தருவதாகும். மேலை நாட்டார் வியந்து போற்றும் கிரேக்கக் கலை வெறும் பொருள் மட்டும் நிற்பது; தமிழ்நாட்டின் சிற்பக்கலையும் கட்டடக் கலையும் அந்த நிலையிலும் மிக உயர்ந்தது; ஆன்ம நிலையின் அடிப்படையில் எழுந்தது என்று அவர்களே போற்றுகிறார்கள்.

காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியில் அறிவுத் தெளிவும், புதியன காணும் ஆர்வமும் மக்களிடையே பிறந்துள்ளன. எனினும், பண்டைக்காலத்து மக்கள் கொண்டிருந்த கோட்பாடுகள், சில நம்பிக்கைகளின் அடிப்படையில் பிறந்தன என்றாலும், அந் நம்பிக்கைகள் சமுதாய நல்வாழ்வுக்கு உரம்ஊட்டவல்ல துணையாகவும் அமைந்திருந்தன என்பதை, நாம் அறவே மறுப்பதற்கு இல்லை. ஆலயங்களுக்கு வழிபாடு கருதிச் செல்பவர்களைப் போலவே, சிற்பக் கலையின் கீர்த்தியைக் கண்டு வியக்கச்சென்று வருபவர்களும் உண்டு. சேலம் திருக்கோவிலின் முன்மண்டபத்தில் காட்சி தருகின்ற நெடிய திருமேனிப் படிமத்தை இராமர் வடிவம் என்றே பலரும் கருதியிருந்தனர். ஆனால், ஈரோட்டைச் சேர்ந்த பெரும் புலவர் தெய்வ சிகாமணிக் கவுண்டர் என்பவர், அது வல்வில் ஓரியின் திருமேனி என்றும், வரலாற்றை இங்ஙனம் ஆலயத்துள் வாழ்வித்தனர் என்றும் அவர் சொல்லித் தாம் அறிந்ததாக, மாண்புமிகு நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்கள், ஒரு முறை குறிப்பிட்டார்கள். இதனால் இறையுணர்வோடு வரலாற்றுணர்வையும் ஊட்டும் கலை நிலையங்களாக ஆலயங்கள் விளங்குதலை அறியலாம்.

நம்மைக்காட்டிலும், அயல்நாட்டிலிருந்து வரும் பெருமக்கள் பலர் நம் திருக்கோயில்களின் அமைப்பையும் அழகையும் மகிழ்ந்து பாராட்டுவதோடு, ஆலயச் சிற்பங்களைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையும் ஆர்வத்தோடு கேட்கின்றனர். பழங்காலத்தில் பொதுநிலையங்கள் என்பவை மிகச் சிலவாகத்தான் இருந்திருக்கவேண்டும். அவற்றுள் திருக்கோயில் மக்கள் வாழ்வின் அனைத்து நிலைகளையும் தழுவிய கலை, பண்பாடு நாகரிக மையங்களாகவும் திகழ்ந்தன. இன்று நம்மை வியப்பில் ஆழ்த்தும் சிற்பக் கலைத்திறத்தின் ஊற்றுக் கண்களாகவே ஆலயங்கள் திகழ்ந்துவந்தன. இக் கருத்திலேயே ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்று முன்னோர்கள் குறித்தனர்போலும்.



மகளிர் இல்ல ஆண்டுவிழாவின்போது
வருகைதந்த பிரதம விருந்தினர்
திரு. சி. சிவமகாராசா அவர்களை
மகளிர் இல்லத்தின் செயலாளர்
மாலைசூட்டி வரவேற்கிறார்



இக்காலத்துக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் ஏற்படாத முன்னர் கோயில்கள்தாம், கல்விக்கும் கலைவளர்ச்சிக்கும் பெரும் தொண்டு புரிந்துள்ளன. கோயில்களில் உள்ள மண்டபங்கள் பலவற்றில், கல்வியும் கலைகளும் பயிற்றுவிக்கப்பெற்றன. கோயில்களில் நடன மண்டபம், இசை மண்டபம், புராணபடன மண்டபம், வியாகரண மண்டபம், தருக்க மண்டபம் முதலியன இருந்தன ; இருக்கின்றன. அவ்வவற்றில் அந்தந்தக் கல்வியும், கலைகளும் பயிலப்பெற்றன. ''சரசுவதி மண்டபம்'' என்றும். ''திருக்கைக்கோட்டி'' என்றும் பெயர்பெற்றிருந்த ஆலயப் பகுதிகளில், சிறந்த நூலகங்கள் அமைந்து பணியாற்றி வந்தன. பழைய நூல்களைப் பாதுகாத்தும், அந் நூல்களைப் பிரதிசெய்தும், படிக்க விரும்புவோருக்கு, அந் நூல்களைக் கொடுத்து வாங்கியும், கோயில்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டுகள் புரிந்துள்ளன.

கோயில்களில் சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் முதலிய எல்லாக் கலைகளும் போற்றி ஆதரித்து வளர்க்கப்பெற்றன. பரிபாடல் என்னும் சங்கநூல், திருப்பரங்குன்றம் கோயிற் சுவர்களில் சூரியன், சந்திரன், மன்மதன்—இரதி, அகலிகை—கௌதமர் வரலாறு முதலிய பலப்பல அழகோவியங்கள் தீட்டப்பெற்றிருந்ததைக் கூறுகின்றது.

